
# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ புரட்டாதி 1981 ★ இதழ் - 69


## பண்டிதமணியும் பனையபிவிருத்தியும்

நவராத்திரி விழாக்காலத்தில் நாம் தேவியைப் போற்றி, மன மாசு நீக்கி, வித்தைகள் பயின்று வீரம், செல்வம், அறிவுபெற்றுப் பெரு வாழ்வு வாழ்வதற்கு முயற்சிசெய்தல் வழக்கம். இந்தப் பாரம்பரிய பழக்கத்தில் வந்தவருள் ஒருவரான பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் பல்லாயிரம் மாணவர்களை உருவாக்கியுள்ளார். ஆயிரம் பிறைகண்டு முதிர்ந்த அவர் எங்கள் நல்லூழினல் எங்கள் மத்தியில் பழைய காலத்து முனிவர் போல வாழ்கின்றார். அவர் ஆண்டு தோறும் நவராத்திரி நாள்களைப் பனையபிவிருத்தி, பயன்தரும் மரங்களபிவிருத்தி என்பனவில் ஊக்கமெடுத்தல் நல்லதெனக்கூறி வாழ்த்தியுள்ளார்.

பனம்பழம் விழத்தொடங்கிவிட்டது. பனம்பழத்தை வீணுக்காமல் அதனைப் பயன்படுத்துவோமாக. முதலில் அதன் அமிர்தம் போன்ற கழியைக் கறந்து வெயிலிற் காயவைத்துப் பனாட்டாக்குவோம். பனம் விதைகளில் ஒரு பகுதியை அபிவிருத்திக்காகப் பயன்படுத்துவோம்.

பனையபிவிருத்தியில் மில்க்வைற் தொழிலகம் விடாப்பிடியாகக் கொண்டுள்ள ஊக்கத்துக்கு அன்பர்களாகிய நீங்களே உறுதுணையும் காரணமுமாவீர்கள். ஆண்டுதோறும் ஆயிரமாயிரமாகப் பனம் விதை தந்துதவும் பெருந் தோப்புக்காரரையும், சின்னஞ் சிறு கைகளாற் பொறுக்கிப் பல்லாயிரமாகக் குவித்துத் தருகின்ற பாடசாலைப் பிள்ளைகளையும், ஊர்கள் தோறும் பொதுநலப் பணிபுரியும் சனசமூக நிலையத் தொண்டர்களையும் மீண்டும் மீண்டும் இருகை நீட்டிப் பனம் விதைகள் தாருங்கள் என்று கேட்கிறோம்,

நீங்கள் தரும் பனம் விதைகள் பன்னிரண்டு ஆண்டுகளில் கிளிநொச்சிப் பிரதேசமெங்கும் பயன்தரும். பனையும் பெண்ணும் பன்னிரண்டாண்டிற் பயன்தரும் என்று பழமொழி கூறுகிறது.



நல்லை ஆதீனப்பணிகளுக்கு உண்டியல் இடுபவர்களுக்கு வழங்குமாறு, மில்க்வைற் தொழிலதிபர் புதுப்பெரியவரிடம் ''ப்ரச்நோத்ர ரத்ன மாலிகா'' நூல்களை அன்பளிப்புச் செய்கிறார்.

உ
சிவமயம்






## திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்

திருநள்ளாறு - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

ஆர ணப்பொரு ளாமரு ளாளனார்
வார ணத்துரி போர்த்தம ணாளனார்
நார ணன்நண்ணி யேத்துநள் ளாறனார்
கார ணக்கலை ஞானக் கடவுளே.

திருச்சிற்றம்பலம்

திருமால் வந்து வணங்கிப் போற்றும் சிவபெருமான் வேதங்களின் பொருளாயுள்ள அருளை ஆள்பவர். அவர் அருளாளர். அவர் யானைவடிவந்தாங்கிவந்த அசுரன் தோலைப் போர்த்தருளிய மணவாளன். அவரே எல்லாவற்றுக்கும் நிமித்த காரணன். அவர் கலைஞானக்கடவுள்.

## திருநள்ளாற்றிறைவன்

நள்ளாறாவென நம்வினைகள் நாசமாகும். நள்ளாற்றிறைவன் நாகமணிந்து கூத்தாடுபவர். அவர் கங்கையைச் சடையில் வைத்தருளியவர். கூற்றுவனை உதைத்தருள்செய்தவர். அவர் எமக்கு உறவினராய்வந்து உள்ளத்தில் உறைபவர், உறைந்து நிறைபவர். அவர் திருமாலுக்குச் சக்கராயுதம் அருளியவர். ஆலகால விடத்தை அருந்தி அகிலத்தைக் காத்தருள் செய்தவர். கரவுவஞ்சகமுள்ளவர்களுக்கு வழிகொடாதவர். நல்லவர்களுக்கு நல்லுபதேசஞ் செய்பவர்.




கடவுள் வாழ்த்து

''வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில''

எப்பொருளையேனும் விரும்புதலும் வெறுத்தலும் இல்லாதவராகிய இறைவனின் மாட்சிமைப்பட்ட திருவடிகளை இடைவிடாது நினைப்பவர்களுக்கு என்றும் எத்தகைய துன்பங்களும் உண்டாகமாட்டா.

## திருவடித்தியானம்

என்றும் நிலையான இன்பமளிக்கும் திருவடிகளைத் தியானஞ்செய்யாதவரின் கல்வியால் எத்தகைய பிரயோசனமுமில்லை. கல்வியின் பயன் உண்மையறிவாகும். உண்மை அறிவை இயல்பாக உடையவர் இறைவன்.

அவரை வணங்குதல் கல்வியின் பயன். இறைவனின் திருவடி மாணடி. அது பெருமைபொருந்திய திருவடி. இறைவன் திருவடி என்பது அவரின் திருவருளாகும். திருவடிஞானம் உயர்ந்த ஞானம். திருநாவுக்கரசுநாயனார் பலகாலம் தவஞ்செய்து இறைவன் திருவடி தம்தலைமேற் சூட்டப்பெற்றார். சுந்தரமூர்த்தி நாயனார் ஒரு திருமடத்தில் நித்திரைசெய்தபோது பலமுறை இறைவன் திருவடி சூட்டப்பெற்றார். அந்தத் திருவடியைக் காண்பதற்கு மால் என்னும் மயக்கத்தால் முடியாது. நான் என்பது அகங்காரம். நான் என்பவர்களாலும் திருவடியினைக் காணமுடியாது. சுத்தமனத்தினராய நல்லடியாரைத் தேடி அந்தத்திருவடி எழுந்தருளலும் உண்டு.

## IN PRAISE OF GOD

To those who always think and cling to the Holy feet of God who is free from likes and dislikes, there shall be no ills of life.

## பகவத்கீதை

தர்மம் அழிவதனால் குலம் முழுவதையும் அதர்மம் சூழுகின்றது.

அதர்மம் சூழ்வதனால் குலப்பெண்டிர் கெட்டுப்போகின்றனர்.

மாதர் கெடுவதனால் வர்ணக்குழப்பம் உண்டாகிறது.

குலதர்மம் கெடுவதனால் எல்லாம் கெட்டுப்போகின்றன.

அதிகாரத்தை விரும்பி நாட்டின் ஒரு பகுதியினரைத் துன்புறுத்துதல் பெரிய பாபம்.

## GOD AND SOUL

God is enlightened and bestows light. God is all bliss and full of happiness. Wise people make friend of Him by righteous action, noble charecter, sincere prayers, observing moderation and self control. Bolt the mind from extrovert wanderings and vecious circling and get peace within, by Pranayamam and Yoga. Wise men get emancipation by fulfilling sacred vows and enjoy eternal peace.

— Ram Lal

✱ தங்களை ஆளவல்லவரே நாட்டை ஆளத்தக்கவர் ✱

# உங்களுக்குத் தெரியுமா?

விடைகள் வேறோர் இடத்தில்

1. கிரகங்களிற் பெரியது.
2. பொதுநலவாய நாடுகளின் தலைவர்.
3. சுழல்துப்பாக்கியைக் கண்டுபிடித்தவர்.
4. ஐக்கிய அரபுக் குடியரசின் தலைவர்.
5. ரெலிவிசன் கருவியைக் கண்டுபிடித்தவர்.
6. நோபெல் பரிசுத்திட்டம் அமைத்தவர்.
7. இலங்கையிற் படித்தவர்கள் முதற்பிரதிநிதி.
8. முதிரைமரம் அதிகமுள்ள தீவு
9. சிங்கப்பூரில் அதிகமாக வாழும் இனத்தவர்.
10. அணுவைப் பிரிப்பதற்கு முதலில் முயன்றவர்.
11. பேசுவது கடினம், பேசாதிருக்கவும் முடியாது என்றவர்.
12. ஹோமியோபதி வைத்திய முறையைக்கண்டவர்
13. யானைக்குட்டி பிறக்கும்போது சராசரி நிறை.
14. பெரியசெவியுள்ள யானைகள் வாழும் நாடு.
15. ஆண்டுதோறும் கொடுக்கப்படும் நோபெல் பரிசு எண்ணிக்கை.
16. மகரக்கோடு, கடகக்கோடு எது தெற்கில் உளது.
17. சுத்தமான பொன்னின் கரட்.
18. சகாரா பாலைவனத்துப் பழங்கள்.

## புத்தகப் புதினம்

### புத்தகம்

புத்தகத்தைப் பொத்தகம் என்றும் வழங்குவர், அதை முற்காலத்தவர் நூல் எனவே பொதுவாக வழங்கினர். அதன்வழி இன்றும் நூலகம் என்னும் பெயர் நிலைத்துள்ளது. புத்தகத்தை எழுதியவர் மாத்திரம் அந்நூலின் பெருமைக்குக் காரணர் அல்லர். அதனைச் சிறப்புற அச்சிட்டு, உருவாக்கிவிட்ட அத்தனை உழைப்பாளிகளும் அந்நூலின் பெருமைக்கு உரியவராவர். அன்றிப் புத்தகம் உருவாவதற்கு வேண்டிய உபகரணங்கள் மூலப்பொருட்கள் யாவற்றையும் கண்டுபிடித்த உத்தமர்கள் வித்தகர்கள் யாவரும் பெருமைக்கும் புகழுக்கும் உரியவராவர். காகிதம் துணி, மை, அச்சு, படம், அச்சுயந்திரம், கோர்த்தல், கட்டுதல், வர்ணந்தீட்டுதல் முதலிய கலைகள் யாவும் புத்தகம் உருவாவதற்கு இன்றியமையாதனவாகும்.

புத்தகப் பிரியர்கள் ஆண்டுதோறும் ஒருநாள் தங்கள் புத்தகங்களுக்குப் பூசைசெய்து வணங்குதல் வழக்கம். அது சரசுவதி பூசையாகும்: புத்தகத்துறை மாது எனத் தொடங்கும் அப்பாடல் கிராமமக்களிடம் அதிகமாகப் பயிலப்பெற்றுவந்தது.

# உழைக்கும் கைகள்

விஞ்ஞான வளர்ச்சியினால் உலகில் எத்தனையோ விதமான இயந்திரங்கள் பொறிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவையாவும் நமது நாளாந்த தேவைகளுக்காகவும் வாழ்வு வசதிகளுக்காகவும் முடுக்கிவிடப்பட்டு வேலை செய்கின்றன. நூற்றுக்கணக்கான தொழிலாளர் செய்ய வேண்டிய வேலையைத் தனித்தொரு இயந்திரம் நுட்பமாகச் செய்துவிடுகிறது. நூற்றுக்கணக்கான இயந்திரங்களின் இயக்கத்தால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் தங்கள் நாளாந்த உழைப்புக்கு வேறு வழிகாணவேண்டியவராகின்றனர்.

எத்தனைவிதமான இயந்திரங்கள் எங்கள் மத்தியில் புகுந்தாலும் எம்மத்தியில் உழைக்கும் கைகளான தொழிலாளர் இல்லாவிட்டால் எங்கள் வாழ்வு தம்பித்துவிடும் என்றுதான் கூறவேண்டும். நாற்பதாண்டுகளுக்கு முன்னர் சார்ளி சப்ளின் என்னும் நகைச்சுவை நடிகர் இயந்திர உலகம் என்னும் படத்தில் இக்கருத்தைச் சுவைபட நடித்துக்காட்டினர்.

இன்று தன்னிறைவுகண்ட நாடுகளும் பிறநாடுகளில் தங்கியிருக்கவேண்டிய அளவில் நாகரிகம் முறுக்கேறியுள்ளது. தேயிலைக்கொழுந்து கொய்யவும், றப்பர்பால் எடுக்கவும், தேங்காய் பிடுங்கவும், பருத்திபறிக்கவும், பழங்கள் பறிக்கவும், ஆடுகள் மேய்க்கவும், மாடுகள்பராமரிக்கவும் இயந்திரங்கள் அசைவதில்லை,

இயந்திரங்கள் மின்சாரத்தால் இயங்குவனவாயினும் அவற்றை இயக்கவும் முடுக்கவும் தடுக்கவும் நிறுத்தவும் துடைக்கவும் பழுதுபார்க்கவும் தொழிலாளர் கைகள் உழைக்கவேண்டும், காக்குமே காராளர் கை என்று முன்னர் கமக்காரர் திருக்கரங்களைப் புலவர்கள் துதித்துப் பாடினர். இன்று தொழிலாளர் கைகள் எம்மைக் காப்பதோடு வாழவைக்கின்றன.

தொழிலாளர் நம்மைக் காப்பதற்கு வேண்டிய வலுவினை ஆற்றல் உள்ள தேவியிடம் ஆயுதபூசைசெய்து பெறுதல் வழக்கம். அரசர்கள் தங்கள் வாள், வில், அம்பு, ஈட்டி, எறிவேல் முதலியவற்றை நீராட்டி, நெய்பூசி பூச்சூட்டி அம்பிகையின் திருக்கடைக்கண் பார்வையில் வைத்தெடுத்தனர், ஈயம் பூசுதல், சாயம் தோய்த்தல், முறுக்கேற்றுதல் முதலிய செயல்கள்போல, அம்பிகையின் திருவருளால் ஆயுதங்கள் வீரம்தோய்க்கப்பெறும்.

மரவேலை, இரும்புவேலை, பொன்வேலை செய்பவர்கள் தங்கள்தங்கள் ஆயுதங்களுக்குப் பூசைசெய்தல் நாடெங்கும் வியாபித்த ஆயுதபூசையாகும். உழைக்கும் கரங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் ஆற்றலும் அசைவும் ஊட்டுபவள் அன்னை. பரிசுத்த மனத்தினராய் வழிபடுவோருக்கு அன்னை காட்சிகொடுத்த வைபவங்கள் அண்மைக்காலத்திலும் நடைபெற்றுள்ளன. திருவருள் நம்மைக் காத்தருள்புரியும்.

★ படிப்பின் பயன் அறியாததை அறிவதேயாகும் ★

உ



# சரஸ்வதி தோத்திரம் என்னும் போற்றி மாலை

(ச. தங்கமாமயிலோன்)

1. சரஸ்வதி சக்தி போற்றி
சாந்தரு பிணியே போற்றி
சுரந்திடு மமுதே போற்றி
சூக்கும சொரூபி போற்றி
நிரந்தர அருளே போற்றி
நீடுயர் அறிவே போற்றி
வரந்தரு தேவீ போற்றி
வாணிநீ போற்றி போற்றி

2. சிந்தனைத் திறனே போற்றி
சீர்தரு செல்வீ போற்றி
நந்தனைக் காப்பாய் போற்றி
நாடிடு பொருளே போற்றி
பந்தனை அழிப்பாய் போற்றி
பாரிய துணையே போற்றி
வந்தனைக் குரியாய் போற்றி
வாணிநீ போற்றி போற்றி.

3. அன்னையே அருளே போற்றி
ஆற்றுவார் ஆற்றல் போற்றி
தன்னையே தருவாய் போற்றி
தாங்கிடுந் தாயே போற்றி
நன்மையே செய்வாய் போற்றி
நான்முகன் தேவீ போற்றி
அன்னமா மயிலே போற்றி
வாணிநீ போற்றி போற்றி

4. குறைவிலாக் குணமே போற்றி
கூர்த்தமெய்ஞ் ஞானம் போற்றி
கறையிலாக் கலையே போற்றி
காண்டகு கடவுள் போற்றி
நிறைவுறு தவமே போற்றி
நீடுயர் நலனே போற்றி
மறைகளின் நிறைவே போற்றி
வாணிநீ போற்றி போற்றி.

5. வெண்ணிறக் கலையே போற்றி
வெற்றிக ளீவாய் போற்றி
உண்ணிறை யுவப்பே போற்றி
உயிர்க்குறு துணையே போற்றி
கண்ணினிற் கலந்தாய் போற்றி
கற்பக வல்லீ போற்றி
வண்மையிற் சிறந்தாய் போற்றி
வாணிநீ போற்றி போற்றி.

6, பங்கயத் திருவே போற்றி
பார்புகழ் பரையே போற்றி
நங்குறை தீர்ப்பாய் போற்றி
நானிலத் தமுதே போற்றி
அங்கயர்க் கண்ணீ போற்றி
ஆனந்த வலையே போற்றி
மங்கையர்க் கரசீ போற்றி
வாணிநீ போற்றி போற்றி.

7. சந்தத மருள்வாய் போற்றி
சஞ்சலந் தீர்ப்பாய் போற்றி
மந்திரத் தெழுந்தாய் போற்றி
மனமகிழ் பிராமீ போற்றி
கந்தநற் கோதாய் போற்றி
கருணையின் கனிவே போற்றி
வந்தருள் மருந்தே போற்றி
வாணீநீ போற்றி போற்றி.

8. நலந்தரு நங்காய் போற்றி
நாற்றிசை விளக்கே போற்றி
பலந்தரு பண்பே போற்றி
பாவலர் துணையே போற்றி
கலந்தருள் தருவாய் போற்றி
கனகயா ழிசைப்பாய் போற்றி
வலந்தரு வடிவே போற்றி
வாணிநீ போற்றி போற்றி,

9. கற்பனை கடந்தாய் போற்றி
கலையெலாந் தருவாய் போற்றி
பற்றினை யறுப்பாய் போற்றி
பவவினை தீர்ப்பாய் போற்றி
நற்றவர் நலனே போற்றி
நாவினி லுறைவாய் போற்றி
மற்றிலாப் பற்றே போற்றி
வாணிநீ போற்றி போற்றி

10. தண்ணளி யுடையாய் போற்றி
தத்துவ மானாய் போற்றி
பண்ணொளி பயந்தாய் போற்றி
பாதபங் கயமே போற்றி
விண்ணவர்க் கிறைவீ போற்றி
வீடியல் வழியே போற்றி
வண்ணநல் வாக்காய் போற்றி
வாணிநீ போற்றி போற்றி.

11. அருந்துணை அரணே போற்றி
அகமுணர் அமுதே போற்றி
பெருந்துணை யானாய் போற்றி
பேதகஞ் செய்வாய் போற்றி
தருந்துணை தருவாய் போற்றி
தவம்வளர் தாயே போற்றி
வருந்துணை வல்லாய் போற்றி
வாணிநீ போற்றி போற்றி.

12, அணங்குயர் அன்னாய் போற்றி
அருளுரு வானாய் போற்றி
கணம்புகழ் கருத்தே போற்றி
கலந்துயிர் காப்பாய் போற்றி
குணங்குறி யற்றாய் போற்றி
குணநலந் தருவாய் போற்றி
வணங்கினர் வாழ்வே போற்றி
வாணிநீ போற்றி போற்றி. ★

★ மனச்சாட்சி பிழையாக வழிகாட்டமாட்டாது ★



## The Tamil View of Life

**S. Natesan**

There are chapters in the Kural to guide the householder and the ascetic, the ruler and the statesman, the citizen and the worker; and there are maxims on the virtues to be cultivated and the vices to be eschewed.

1. To be pure in mind without a taint is the sum of all virtues; all else is ostentation. Evil brings forth evil; evil, therefore, shall be feared more than fire. Those who have no love for others live for themselves; as for those who are full of loving - kindness, even their bones belong to others. It is ignoble to forget a kind act done to you; but an ill turn received is best forgotten at once; of what avail is one's goodness, if one does not **do good** to those who those that have done harm; They alone live without blemish; they alone die who die without acquiring fame.

— To follow•

## பழைய வடமாகாணம்

இலங்கை ஆங்கிலேயராட்சியின் ஆரம்பகாலத்தில் ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தபோது, வடமாகாணம் மிகப்பெரிதாயிருந்தது. வடமாகாணத்தின் தலைநகரான யாழ்ப்பாணம் பதினொரு மாவட்டப் பிரிவுகளுக்குத் தலைமைத் தானமாயிருந்தது. புத்தளம், சிலாபம், மன்னார், அனுராதபுரம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவுப்பகுதிகள், வன்னி, திருக்கோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் என பதினொரு பிரதேசங்களிருந்தன.

## நாடும் நாட்டு வளமும்-பின்லாந்து

உலகின் மிக வடக்கே உள்ள நாடுகளில் பின்லாந்து என்னும் நாடு சுவீடன், நோர்வே, ரூசியா, ஆகிய நாடுகளுக்கு அருகில் உள்ளது. பாறைகள், குன்றுகள், தீவுகள், குளங்கள், குகைகள் உள்ள நாட்டில் 30000 தீவுக்கள் உள்ளன. அங்கே 60000 ஏரிகள் உண்டு. பின்லாந்தில் பகல் அதிகம். ஏறக்குறைய 19 மணிநேரம் பகற்பொழுதாயிருக்கும். அன்றி ஆண்டில் 73 நாட்கள் ஒரேபகலாய் இருக்கும். அதுபோல் 51 நாட்கள் ஒரே இரவாயும் இருக்கும். அங்கே மாதக்கணக்கில் பனியுறைந்திருக்கும்.


பின்லாந்து மக்கள் இருபது ஆண்டுகளில் நன்றாக முன்னேறியுள்ளார்கள். அங்குள்ள ஜனாதிபதி மந்திரிகளின் ஆலோசனையை மதித்துக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பர். பிரதம மந்திரியாருக்குப் போதிய அதிகாரம் உண்டு. அங்கே மனிதாபிமானம் மனித உரிமை மகத்தானவை. சட்டம், பாதுகாப்பு, உரிமை, உடைமை சுதந்திரம் எல்லாம் உண்டு. கட்டாய இராணுவ சேவையும் உண்டு.

பின்லாந்து மக்கள் பசுவோம்பிப் பால்வளம் பெருக்கி வெண்ணெய் முதலியன ஏற்றுமதி செய்வர். உணவுக்காக பார்லி, ஓட்ஸ், உருளைக்கிழங்கு வேறு தானியங்கள் உண்டாக்குவர். நிக்கல், செம்பு முதலிய உலோகங்கள் அங்கே கனிப்பொருளாகக் கிடைக்கின்றன. பண்ணையும் காடும் அவர்களுக்குப் போதிய வருமானந் தருகின்றன. பின்லாந்து மக்கள் கலைத்திறமை வாய்ந்தவர்கள், கைத்தொழிலறிந்தவர்கள். படிப்பார்வம் உள்ள மக்கள் மத்தியில் நூலகங்கள் அதிகம் என்பர்.

## மாவட்ட வரலாறு

ஒவ்வொருவரும் தத்தம் மாவட்ட வரலாற்று நூல்களைச் சிறப்பாகவும் இலங்கை வரலாற்றைப் பொதுவாகவும் அறிந்துகொள்ளுதல் அவசியம். யாழ்ப்பாணத்தைப் பற்றிய வரலாறு பல பழைய நூல்களில் உண்டு. தக்ஷண கைலாய புராணம், திருக்கோணாசல புராணம், கைலாச மாலை, வையாபாடல், நகுலேஸ்வர மான்மியம், ஈழமண்டலசதகம், யாழ்ப்பாணச் சரித்திரம், யாழ்ப்பாண வைபவம், யாழ்ப்பாண வைபவமாலை, இராசமுறை, பரராசசேகரனுலா, யாழ்ப்பாணக் குடாநாடு முதலியனவும் பிற்காலத்தில் எழுந்தனவுமான பலநூல்கள் உள்ளன. இவற்றைவிட இலங்கைச் சரித்திர நூல்களிலெல்லாம் யாழ்ப்பாண வரலாறு கூறப்பட்டுள்ளது. இவற்றைவிட போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் எழுதிய வரலாறுகளில் யாழ்ப்பாணம் சிறப்பிடம் வகிக்கிறது: கிறிஸ்தவ மிசனரித்தொண்டர்கள் தங்கள் மதம்பரப்பிய காலத்தில் யாழ்ப்பாணக் கோயிற்பற்றுக்கள் தோறும் பொதுமக்களுடன் வாழ்ந்து அவர்கள் வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளார்கள். தமிழ்நாட்டுத் தமிழரிடையே காணப்படாத பல பண்பாட்டுச் சிறப்பியல்புகள் யாழ்ப்பாணத் தமிழரிடையே மண்டிக்கிடக்கின்றன.

★ படிப்பு என்பது புத்தகத்தோடு நின்றுவிடலாகாது ★



## பஞ்சதந்திரம்

இன்பத்தை அனுபவித்துவரும் நல்லவர்கள், நண்பர்களால் தாமும் மகிழ்ச்சியடைந்து, நண்பர்களேயும் மகிழ்வித்து அவர்களோடு அன்பைப் பேணுகின்றனர்.

நட்பு என்னும் அணிகலனே அணியாதவன் செல்வனுயுள்ளபோதிலும் அவன் வாழ்வு வெறும் வாழ்வுதான், பேராசையால் பிடிக்கப்பட்ட மனமும் வீண் சிரமமும் நிறைந்தது அந்த வாழ்வு.

நல்லவர்களே நல்லவர்கள்தான் காப்பாற்றமுடியும். சேற்றில் சிக்கிய யானேயை யானேதான் தூக்கிவிடமுடியும். துயருள்ளவர்களேக் காக்காத வீரம் என்ன வீரம். யாசித்தவர்களுக்குத் தராத தனம் என்ன தனம். நன்மையளிக்காத செய்கை என்ன செய்கை, புகழைக் கெடுக்கும் வாழ்வு என்ன வாழ்வு.

நீசர்களோடு இந்திரலோகத்து வாழ்வைவிட அறிவாளிகளோடு நரகலோக வாழ்வு இனியது.

யானே தொட்டாலும் சாவு, பாம்பு மூச்சுவிட்டாலும் சாவு. அரசன் சிரித்தாலும் சாவு, துஷ்டன் கௌரவித்தாலும் சாவு.

## கைத்தொழில் வளம்

இன்றைய கைத்தொழிலபிவிருத்தியிலும் வளத்திலும் உலகப்புகழ் பெற்ற பெரியவர்களுள் லிவர் சகோதரர்கள் தனிப்பெருமை வாய்ந்தவர்கள். ஐரோப்பிய நாடுகளில் 94 தொழிற்சாலேகளும், பிரித்தானியாவில் 57 தொழிற்சாலேகளும், உலகெங்கும் 249 தொழிற்சாலேகளும் அமைத்த லிவர் சகோதரர்கள் உலகில் 50 நாடுகளில் 50 நிறுவனங்களில் 300000 தொழிலாளர்களுக்கு வேலே கொடுத்துள்ளார்கள். அவர்கள் 1200 வகையான உற்பத்திப் பொருட்களே உலக மக்களுக்கு விநியோகிக்கிருர்கள். அவர்களின் ஆரம்பகாலத்து முதலீடு 577000000 பவுண் என்ப.

சன்லேற், லக்ஸ், ஓமோ, விம், லேவ்போய், சன்சில்க், மாகறைன், ஐஸ்கிறீம் முதலியவற்ருேடு, மிருக உணவுகள், மருந்துப்பொருட்கள், குளிகைகள், உணவுவகைகள், தகரத்தில் அடைக்கப்படும் உணவுகள் இன்னும் பலவித மான தயாரிப்புகள் அவர்கள் புகுத்தியனவாகும்.

## சரசுவதி சிந்தனே

(ஒரு பழம்பாடல்)

''புத்தகத் துள்ளுறை மாதே
பூவி லமர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளே நங்காய்
வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடை யாளே
மூவுலகுந் தொழுந் தேவி
செப்புக் கவித்தன தனத்தாய்
செவ்வரி யோடிய கண்ணுய்
முத்துநி ரைத்தவெண் பல்லாய்
முருக்கம் பூமேனிநிறத் தாளே
தக்கோ லந்தின்றதுவர் வாயாய்
சரஸ்வதி யென்னுந் திருவே
எக்கா லும்உனேத் தொழுவோம்
எழுத்தறி புத்திபண்ணு விப்பாய்
அக்கா லெம்பெரு மாட்டி
அழகிய பூவணே மீதாய்
நோக்கா யென்மிடி தீர
நொடிக்கும் பிராமணத்திநோக் காயே
சாலி நெல்லரிசி கொண்டு
சரஸ்வதி பூசை பண்ணிப்
பாலொடு பழத்தை நிரப்பிப்
பரவித் தொழுவோம் நங்காய்
நங்காய் நங்காய் நமஸ்து
ஞானக் கொழுந்தே நமஸ்து
கல்விக் கரசே நமஸ்து
கணக்கறி தேவி நமஸ்து
சொல்லும் பொருளே நமஸ்து
சூட்சும ரூபி நமஸ்து''.



## Lord Buddha and Acts of Merit

1. Give charity to the deserving.
2. Observe the precepts of morality.
3. Cultivate and develop good thoughts.
4. Render service and attend on others.
5. Honour and nurse parents and elders.
6. Give a share of your merits to others.
7. Accept the merits that others give you.
8. Hear the doctrines of righteousness.
9. Preach the doctrine of righteousness.
10. Rectify your faults.

## புகைவண்டியின் வேகம்

புகைவண்டி டீசல்வண்டி எனப்பெயர்பெற்று இன்று மின்சாரத்தால் இயங்குகிறது, யப்பானில் அது மணிக்கு 130 மைல் வேகத்தில் ஓடுகிறது.

★ வேதம் என்பது அறியாததை அறிவிப்பதாகும் ★



# ஔவை
# அருந்தமிழ்

## சித்தர் வைத்தியத்தைச் சிலேடையாகப் பாடியது

ஓர் இடையர் சேரியில் அதிகாரம்மிக்க மூன்று இடையர்கள் இருந்தார்கள். அவர்கள் மூவருக்கும் கோனர் என்று பெயர் வழங்கியது. அவர்களை வேறுபடுத்தி அறிவதற்காக ஊர்மக்கள் அவர்களை வாதக்கோன், மற்றைக் கோன், ஏதக்கோன் என வழங்கினார்கள். ஔவையார் இவ்மூவரின் போக்கையும் ஊர்மக்களுக்கு உணர்த்துவதற்கு விரும்பினார்.

அவர் வாதக்கோனிடம் சென்று தமக்கு ஒரு ஆடு தரும்படி கேட்டார். அதற்கு இடையன் நாளைக்குத் தருவேன் என்று தவணை கூறினான். நல்லது என்று கூறிய ஔவையார் மற்றக்கோனிடம் சென்று கேட்டபோது அவன் பின்னேரம் தருகிறேன் என்று கூறினான். அடுத்தாற்போலிருந்த ஏதக்கோனிடம் கேட்டபோது அவன் கையை விரித்து கொடுப்பதற்கு என்னிடம் ஆடு இல்லையே என்று மறுத்துக் கூறினான்.

ஔவையாருக்குச் சிரிப்பாய் இருந்தது. இந்தவிதமாக ஈகை விஷயம் இருக்கிறது, என்ன செய்யலாம் என்று எண்ணினார். தம்மருகே நின்ற ஒரு பெண்ணைப் பார்த்துச்சொன்னார். ''நான் சொல்வதைக் கேட்பாயாக. வாதக்கோன் நாளைக்குத் தரலாம் என்றான், மற்றக்கோன் பின்னை தரலாம் என்றான், ஏதக்கோன் ஏதுமில்லை என்று மறுத்தான், இந்த மூவருள்ளும் நாளை பின்னை என்று சொன்னவர்களிலும் பார்க்க உடனடியாக இல்லை என்று சொன்ன ஏதக்கோன் சொல்லே இனிமையானது.

வாதக்கோன் நாளையென்றான் மற்றைக்கோன் பின்னை
யென்றான்
ஏதக்கோன் யாதேனும் இல்லையென்றான்.. ஓதக்கேள்
வாதக்கோன் சொல்லதிலும் மற்றைக்கோன்சொல்லதிலும்
ஏதக்கோன் சொல்லே யினிது.

இனி இந்தச் செய்யுளில் சிலேடையாகவுள்ள சித்த வைத்திய நுட்பமாவது, எமது உடம்பில் வாதம், பித்தம், சிலேட்டுமம் என்னும் மூன்று நாடிகள் உள்ளன, இவற்றுள் வாதநாடி அடங்கினல் ஒருநாளில் உயிர் போய் விடும் என்றும், பித்தநாடியடங்கினல் சிறிது நேரம் கழிய ஆவி பிரியுமென்றும், சிலேட்டும நாடி அடங்கினல் உயிர் பிரிவதற்கு அடையாளமாகும் என்றும் கூறுவர்.

## பனம்பிரயோசனம்

பனம்பழத்தைப் பக்குவமாகக் கழுவி அதன் தோலை நீக்கிக் களியைக் கறந்து பனாட்டுச் செய்வதோடு. பனங்களியை கோடியல் முதலியன செய்தற்கும் பயன்படுத்தலாம். சாதாரண பானங்களுள் பனங்களிப்பானம் நாவுக்குச் சுவையாகவும் உடம்புக்கு இதமாகவும் இருக்கும். பக்குவப்படுத்திய பனங்களியைக்கொண்டு வேண்டிய போது பனங்காய்ப் பணியாரம் செய்வர். மாவிற்கலந்து நல்ல முறையில் தோசை தயாரிப்பர். பனங்காய்ப் பணியாரம் தோசை முதலியவற்றுக்கு.இலுப்பெண்ணெய் மிகவும் உவப்பானது என்பதைமுதியவர்கள் நன்கறிவர். பனம்பழங்களை வீண்போகவிடாதீர்கள் என்று தமிழ்நாட்டுப் பனையபிவிருத்தி நிபுணர் திரு. சம்பந்தம் அவர்கள் மில்க்வைற் தொழிலதிபருக்குக் கடிதத்தின்மேற் கடிதம் எழுதிவருகிறார்: இதோ பனம் பழக்காலம். அதை நாம் பயன்செய்வோமாக.

## பனாட்டும் சூரியசக்தியும்

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகச் சூரியசக்தியை பயன்படுத்த மேற்குநாட்டு விஞ்ஞானிகள் கங்கணம்கட்டி நிற்கும் வேளையில், யாழ்ப்பாணத்துப் பனங்கொட்டைகள் அதிலும் பட்டிக்காட்டுப் பாமரர்கள் தங்கள் முன்னோர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாரம்பரியமாகச் சூரிய சக்தியைப் பயன்படுத்திப் பனாட்டுச் செய்ததை நினைத்துப் பூரிக்கிறார்கள். பனாட்டு ஆதவன் சுட்ட பணியாரம்.

## அறிந்துகொள்ளுங்கள்

1. இருக்குவேதத்துக்கு அதிதேவதை அக்கினி;
2. யசுர்வேதத்துக்கு அதிதேவதை இந்திரன்.
3. சாமவேதத்துக்கு அதிதேவதை சூரியன்.
4. மூன்றுவேதங்களிலும் கறந்தபால் காயத்திரி மந்திரம்.
5. பிள்ளைகளுக்கு மங்களகரமான பெயரிடுதல்நன்று.
6. பிள்ளைகள் சோம்பலின்றிப் படித்தல்வேண்டும்.
7. பெரியவர்களை அலட்சியம் செய்தால் ஆயுள் குறையும்.
8. வளர்ந்தும் அறிவில்லாதவனாயின் அவன் பாலனாவன்.
9. மந்திர உபதேசம் செய்பவர் தந்தையாகிறார்.
10. பசுவைப் பார்த்துக்கொண்டு மலசலங்கழிக்கலாகாது.
11. இருக்குவேதம் தெய்வாம்சம் உள்ளது;
12. யசுர்வேதம் மனிதாம்சம் உள்ளது.
13. சாமவேதம் பிதிர் அம்சம் உள்ளது.
14. நாம்செய்யும் பாவம் மெதுவாகவே நம்மைத் தண்டிக்கவரும்.
15. பரலோகத்திலும் நம்மைக் காப்பது தர்மம் ஒன்றே:
16. தர்மம் ஒன்றே நம்மைப் பின் தொடரவல்லது.
17. தர்மத்தின் உதவியால் இருளையும் தாண்டலாம்.
18. வானப்பிரஸ்தம் என்பது இந்திரிய அடக்கமே.

★ மேதைகள் கடினமானதை இலகுவாகக் கூறுவர் ★



# நவராத்திரி நாயகி

நாயகி, நான்முகி, நாராயணி என்று தேவியர் திரு நாமங்களை மொழிந்த அபிராமி பட்டர் மூவருக்கும் முதல் வியாகிய நாயகியை நாதரூபமாய் நின்ற அம்மையே எனப் பாடுவர்.

அன்னையின் திருவுருவங்கள் மிகப்பல. அவள் திருவருளின் வெளிப்பாடாகையால், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் அருளியவாறு அருளும் ஆதிமாண்பும் அளவிலாதனவாகும்.

பராசக்தி, சரசுவதி, இலக்குமி, உமை, சாம்பவி, மனோன்மணி, சாமளை, வராகி, மாதங்கி முதலாகப் பல்வேறு திருவுருவங்களைப் பொருந்திநிற்கும் ஒருத்தியைத் தேவாதி தேவர்களேயன்றி மூவரும் சரணம் சரணம் எனப் போற்றுவர் என்பர். அவள் பெம்மானும் முகுந்தனும் சரணம் எனநின்ற நாயகி.

சக்திதான் பலவோ என்னில் தான்ஒன்றே அநேகமாக வைத்திடும் காரியத்தால் என்பது சிவஞானசித்தியார். அது ஒன்றாய் உள்ளபோதிலும் பல்வேறு வடிவ பேதங்கள் கொண்டு வெவ்வேறு தொழில்களை இயற்றி உயிர்களுக்கு நலம்புரியும்.

எத்திறம் இறைவன் நின்றான் அத்திறம் அவளும் நின்று ஆன்ம கோடிகளுக்கு அருள்புரிகின்றாள். அவள் தந்த ஆக்கமே இத் தனுகரண புவன போகங்கள். அவளே ஆன்மாக்களை மாசுபோக்கி ஆன்ம நாயனை அடையச்செய்பவள்.

அமைதி நிலையிலுள்ள சிவத்துக்கு ஆற்றல் நிலை அருட் பண்பாடாகும். பண்பைப் பண்பியினின்றும் பிரிக்கமுடியாதவாறு, அவளை அவனிடமிருந்து பிரிக்கமுடியாது. சக்தியும் சிவமும் ஆயதன்மை இவ்வுலகமெல்லாம் என்பது சித்தாந்தம்.

அருட்சக்தி இறைவனுக்குத் தாயாயும் மகளாயும் தாரமாயும் நிற்பள் என்பர் திருமூலர். சிவனே அவளுக்குக் கேள்வன், மகன், தகப்பன், தமையன் என்பர் மாணிக்கவாசக சுவாமிகள். இவர்தம் உறவைக் குமரகுருபர சுவாமிகள் மனைவி, தாய், தங்கை, மகள் என்பர். இத்தகைய உறவு முறையில் அவன் பிரமசாரி. அவள் கன்னி என்பர் அருணந்தி சிவாசாரியர்.

நங்கை (நம்கை) யினால் நாம் அனைத்துஞ் செய்தல் போல் இறைவன் நங்கை (நாயகி) யினால் எல்லாவற்றையும் செய்வர் என்பது திருக்களிற்றுப்படியார்.

பாரதநாட்டில் வடக்கில் காஷ்மீரம் முதல் தெற்கில் கன்னியாகுமரி வரையுமுள்ள பெருநிலப்பரப்பில் 64 சக்தி பீடங்கள் உண்டென்பர். வங்காளம், அசாம், திபெத் முதலிய மாநிலங்களில் சக்தி வணக்கம் அதிக வியாபகமுள்ளது.

வடக்கில் அம்மையை ஆற்றலும் ஆவேசமும் மிக்கவளாக மறக்கருணை நெறியில் வழிபாடு செய்பவர் பலர். தெற்கில் அம்மையை அழகும் அருளும் மிக்கவளாய் அறக்கருணைநெறியில் வழிபடுதல் மரபு.

தென்னாட்டு முறையை ஸ்ரீ வித்தை என்பர். அதில் மந்திரம், தந்திரம், எந்திரம் என்னும் மூன்றும் கோணங்களாய் உள்ளனவாகும். காமாட்சி வடிவில் திருமகளாய அலைமகள் வலக்கண், நாமகளாய கலைமகள் இடக்கண், ஞானப்பெருமாட்டியாய மலைமகள் நுதற்கண். காமாட்சி செல்வம், கல்வி, வீடுபேறு அளிப்பவளாவள்.

## பண்டிகைகளும் பண்பாடும்.

பண்டிகைகளும்விழாக்களும் வடக்கிலிருந்து வந்தவையானாலும் தெற்கிலேதான் உண்டானவையானாலும் நம் பண்பாட்டைக் பண்டைக்காலம் முதலாக வளர்த்துவந்துள்ளன.

தமிழகத்தில் பண்டைக்காலம் முதலாக நிலவிவந்த பண்டிகைகள் யாவும் பக்திமயமானவை. கடவுள் வழிபாடில்லாத பண்டிகை எம் சமயத்தில் கிடையாது. பக்திக்கு அடுத்தபடி சுத்தம், சுகாதாரம், மக்கட்பண்பு, ஒற்றுமை முதலியன வளர்வதற்குப் பண்டிகைகள் பயன்தந்து வந்தன,

எங்கள் சமுதாயக் கட்டுக்கோப்பு சமய அடிப்படையிலேயே உண்டானது. சாதியிலும் சமயமே பெரிது. என்பது எங்கள் அடிப்படைக் கோட்பாடு. நாம் தாய் மொழியோடு வேறு மொழிகளைப் பேசினாலும் எம் சமயத் துறையில் நிலைபெயராது நின்று வந்தவர்கள். பண்டிகைகளை நாம் பேணிவரின் அவை நம்மைக் காக்கும். கலையை வளர்க்கும்.

---

## உங்களுக்குத் தெரியுமா? விடைகள்.

1. வியாழன், 2, எலிசபெத் இராணி, 3. சாமுவேல் கொல்ட், 4. கைரேகை, 5. சேர் யோன் லொஜிபெயாட் 6. அல்பிரட் நொபல், 7. சேர் இராமநாதன். 8. இலங்கை 9. சீனர். 10 றதர் போட் 11. எட்மண்பேக் 12. கனேமன். 13. தொண்ணூறு கிலோ. 14. ஆபிரிக்கா 15. ஐந்து. 16: மகரக்கோடு. 17. இருபத்துநான்கு 18. பேரீந்து, தோடை.

---

# Glory of God

## God is one and one only

God is one, wise people of different religions call him in different names, He is the same. He is one and one for all. The qualities deputed in these names are Truth, Justice, Love, Beauty, Broad-mindedness and so on. God made man the jewel of his creation, man made divisions and bound God to sects and creads.

— Ram Lal

---

★ பட்டினி கிடப்பவன் தேசாபிமானியாவதில்லை ★

## தமிழ் வளர்த்த ஐரோப்பியர் சிலர்

### வணக்கத்துக்குரிய ஜி. யு. போப்

திருவாசகம், திருக்குறள், நாலடியார் ஆகிய நூல்களில் பெரிதும் ஈடுபட்டு அவற்றை ஆங்கிலத்தில் சிறிதும் சந்தஞ்சிதையாமல் மொழிபெயர்த்த ஆங்கிலேயர்; ஐரோப்பியர் எழிதில் தமிழ் பயில்வதற்குக் கைநூலாகத் தமிழிலக்கணங்கள் மூன்றுபாகஞ் செய்தவர். தமிழிலக்கியத்தில் தாம்சுவைத்த இனிய செய்யுட்கள் பலவற்றை ஒன்றுதிரட்டித் **தமிழ்ச் செய்யுட் கலம்பகம்** என்னும் நூல் ஒன்றை வெளியிட்டவர். தாயுமானவர் பாடல்களிலும் புறப்பொருள் வெண்பாப்பாடல்களிலும், புறநானூற்றுப் பாடல்களிலும் சிற்சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்.

பிறின்ஸ் எட்வேட் தீவில் 1820ம் ஆண்டிற் பிறந்த ஆங்கிலேயராய இவர் கிரேக்கம், எபிரேயம் முதலிய மொழிகளையும் பயின்று தமது பத்தொன்பதாம் ஆண்டுப் பராயத்தில் தமிழ்நாட்டில் வெஸ்லியன் மிசனரியாகப் புகுந்து தமிழின்பத்தில் தோய்ந்தவர். திருநெல்வேலி, தஞ்சாவூர், பெங்களூர் முதலிய இடங்களில் சமயப்பணி புரிந்தபின் தாயகம் மீண்டு ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய் அமர்ந்து, சமயத்துறையில் D. D. என்னும் கலாநிதிப் பட்டம் பெற்றவர். எண்பத்து மூன்று வயதுவரை வாழ்ந்த இவர் 1903ல் மறைந்தார். இவர் தமிழ்நாட்டில் இராமானுஜ கவிராயரிடம் கல்வி கற்ருர் என்றும், தம்முடன் பயின்ற இரேனியுஸ் குருவின் தமிழறிவின் தரத்தைப் புகழ்ந்துள்ளாரென்றும் கூறுவர். போப் ஐயர் நல்ல தமிழ் எழுதியுள்ளார். துண்டுப்பிரசுரங்களிலும் அவர் எழுதிய கட்டுரைகளிலும், அவரின் அறிக்கைகளிலும் அவர் தமிழ் நடையை நன்கறியலாம். திருநெல்வேலியில் பணிபுரிந்தகாலத்தில் இவர் சயாபுரம் என்னும் இடத்தில் ஒரு பாடசாலை நிறுவியுள்ளார். தஞ்சாவூரில் இவர் பணிபுரிந்தபோது அங்கேயிருந்த ஒரு பாடசாலையின் தரத்தை உயர்த்தியுள்ளார். பெங்களூரில் பணிபுரிந்தகாலத்தில் இவர் மதகுருவாகவும் பிஷப்காருடன் பாடசாலைத் தலைமையாசிரியராயும் கடமையாற்றியுள்ளார்.

நீண்டகாலமாகத் திருவாசகத்தை மொழிபெயர்த்து வந்தவர் அதனைத் தமது எண்பதாம் வயதளவில் நன்கு நிறைவேற்றினுர். அக்காலத்திலேதான் கன்ரபரிமகா பிஷப் இவர் பணியை வியந்து இவருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கினுர் என்ப. இவர் 1839 முதல் 1841 வரை இரண்டாண்டுகளுள் நல்லமுறையில் தமிழ்பயின்று எழுதிய **வெஸ்லியன் சங்கம்** என்னும் தமிழ்க்கட்டுரை தரம் வாய்ந்ததாய் நிலவுகிறது.

## கிழக்கின் ஒளி

நாங்கள் விஸ்கிப் பானத்தின் விளம்பரத்தில் ஈடுபட்டு மேற்கே நோக்கியவாறிருந்தால், கிழக்கில் உதயமாகும் ஒளியையும் மலரும் வாழ்வையும் அறியமுடியாது என்று சனுதன தத்துவம்பற்றி எழுதிய பெரும்புகழாளர் அல்டஸ் ஹக்லி எழுதியின்ளார்.

முற்றொடர்:-

## ★ மாவட்ட அபிவிருத்தி ★

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தியில் ஊக்கங்கொண்ட தலைவர்களுக்குக் கரங்கூப்பி விண்ணப்பித்துக் கொள்வது, யாழ்ப்பாணத்தில் உழவுவளம், உற்பத்தி வளம், கைத்தொழில் வளம், கைத்திறன் வளம் அபிவிருத்தியடைவதற்கு அடிப்படையாக மனவளம் உள வளம் விவேக வளம் அபிவிருத்தியடைதல் வேண்டும். முதலில் மொழியபிவிருத்தி உண்டாதல்வேண்டும்.

ஆறுமுகநாவலர் மரபிலும் முத்துக்குமார கவிராயர் மரபிலும் கல்விகற்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் காவியபாடசாலையொன்று நடத்தி நூற்றுக் கணக்கான பண்டிதர்களை உருவாக்கியவர். ஆசிரியகலாசாலையில் முப்பதாண்டு ஆசானுயமர்ந்து ஆயிரத்து அறுநூற்றுக்கும் அதிகமான தமிழாசிரியர்களைத் தமிழிலக்கிய இலக்கணங்களில் தோய்த்தெடுத்தவர். இன்று அவருக்கு எண்பத்திரண்டு ஆண்டுகள் நிறைந்துவிட்டன. ஆயிரம் பிறைகண்ட அவரைக்கொண்டு நல்லமுறையில் தமிழ்ச் சங்கத்தை ஆரம்பிக்கலாம். முன்னர் நல்லமுறையில் சென்னையில் கல்விகற்றுவந்து நல்லதொரு கல்லூரியில், நீண்டகாலம் அதிபராயிருந்து, கலையாக்கங் கருதியியங்கிய கலாநிலயத்தோடு தொடர்புகொண்டவராய ச. அம்பிகைபாகன் அவர்களையும் ஆலோசகர்களாய்க் கொள்ளலாம். பாடசாலைப் பரிசோதகராயிருந்து யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தை நடத்திய அன்பர் சரவணமுத்து அவர்களையும் சங்கத்தின் நடைமுறைகளைப் பற்றிக் கேட்டறியலாம், இன்னும் ஆசிரியத்துறையில் ஐம்பதாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவமுள்ள தந்தை நேசையா அவர்களையும் கேட்டறியலாம், இன்னும் ஊர்கள்தோறும் மூதறிஞர் பலர் ஓய்வுபெற்றிருக்கிருர்கள். அவர்களையெல்லாம் பயன்படுத்தித் தமிழ்ச்சங்கம் பணிபுரிதல் வரவேற்கத்தக்கது,

தென்கலைவல்லார், வடகலைவல்லார், மேற்றிசைக்கலைவல்லார் யாவரும் தமிழ்ச்சங்கத்தில் பணிபுரிதல் விரும்பத்தக்கது. பாடசாலைகள், கல்லூரிகளில் தமிழறிந்த ஆசிரியர்களே தமிழ்மொழி கற்பித்தல் அவசியமாதல்வேண்டும். முன்னர் தமிழில் மேலதிகத் திறமைவாய்ந்தவர்கள் ஆறுந்தரத்துக்கு மேற்பட்ட வகுப்புக்களில் தமிழ் கற்பித்து மாதந்தோறும் சிறப்புப்படியாகப் பத்துருபா பெற்று மகிழ்ந்தனர், அதுநோக்கிப் பலர் பண்டிதர்களான சம்பவங்கள் இறும்பூதெய்தக்கூடியது. ஆனந்தவிகடன் பத்திராதிபராய் இருந்த காலத்தில் இங்கு வருகை புரிந்த கல்கி என்னும் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ''யாழ்ப்பாணத்தில் தடக்கிவிழுந்தால் ஒருபண்டிதர்மீதுதான் விழலாம்'' என்று விகடமாகக் கூறியதோடு தமது விகடனில் எழுதியதும் உண்டு, எனவே வண்டமிழ் வல்ல பண்டிதர்மார் எங்கும் பெருகுதல்வேண்டும்.

பண்டித பரீட்சையினைத் திறம்பட நடத்திய மதுரைத் தமிழ்ச்சங்கம் 1949ம் ஆண்டின் பின் பரீட்சைகள் நடத்தவில்லை, இன்று நமக்கெனப் பல்கலைக்கழகமொன்று நல்ல

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்)

**அன்பும் ஆற்றலும் இணைந்தால் அற்புத சாதனை செய்யலாம்**




நூறுண்டுகளுக்குமுன் காந்தியடிகளுக்குப் பத்துவயது நிறைந்து பதினேராம் வயது தொடங்கியது. பாரதநாடு என்னும் பழம்பெருமை வாய்ந்த இந்தியா பிரித்தானியாவுக்குச் சொந்தமாகி விக்ரோறியா இராணி இந்தியாவின் பேரரசியெனப் பிரகடனப் படுத்தப்பெற்று மூவாண்டுகளாயின. காந்தி ஆரம்பப் பாடசாலையில் படித்துவந்த போது அன்னை புத்லிபாய் அவருக்கு நற்பழக்கங்கள் பழக்கிச் சமயவாழ்வில் ஈடுபடுத்திவந்தார்.

சாதாரண மாணுக்களுகப் படித்துவந்த காந்தி மெற்றிக்குலேசன் பரீட்சையில் சித்திபெற்றபின் லண்டனுக்குச் சென்று, பரிஸ்ரர் என்னும் நியாயவாதியாவதற்கு முயற்சி செய்தார். தாம் பரிஸ்ரராய் மீண்டால் தமக்கு திவான் என்னும் அரச ஆலோசகர் பதவி கிடைக்கலாம் என நம்பினர்.

காந்தி இங்கிலாந்துக்குப் போவதைத் தாயார் விரும்பவில்லை, காந்தி தம்மாலானவரை முயன்று உத்தரவுபெற்ற போது, தாயார் மூன்று நிபந்தனைகளை விதித்தார். ''மகனே! நீ மற்சம் மதுபானம், மாது இம்மூன்றையும் தீண்டல்காது.'' தாய்சொல்லைத் தட்டாமல் இங்கிலாந்தில் வாழ்ந்து படித்துவந்த காந்தி, தாம் திருமணமானவர் என்பதை எவருக்கும் வெளியிடவில்லை. அலங்கார ஆடம்பரப்பிரியராக வாழ்ந்து அவரை மணந்துகொள்வதற்கு ஆங்கிலேயப்பெண்கள் முந்தியடித்து மோதியதுண்டு. இத்தகைய சூழ்நிலையிலேதான் அவர் தாம் மணமானவர் என வெளிப்படுத்தினர். அதனல் போட்டியிட்ட பெண்கள் நன்றிகூறிப் பின்வாங்கினர்கள். காந்தியடிகள் 10-7-1891ல் பரிஸ்ரர் பட்டம் பெற்றபின் 12-7-1891ல் இந்தியாவுக்குத் திரும்பினர். திரும்புமுன் லண்டனில் தமது நண்பர்களுக்குத் தாவரவுணவு கொடுத்து விருந்துபசாரம் செய்தார்.

# Great Sayings

1. Experience is the universal mother of science.
2. Let every man mind his own business.
3. Little said is soon amended.
4. Honour is dearer than life.
5. He that gives quickly gives twice.
6. Idleness is the holiday of fools.
7. Laws are dumb in the midst of arms.
8. The good of the peopie is the highest law,
9. Reason is the mistress and queen of all things
10. To live long is to live slowly.

**சென்ற நூற்றுண்டில்:**

## குடிசன மதிப்பு

இயேசுபெருமான் திருவவதாரம் செய்தநாளில் குடிசனமதிப்பு இருந்தது. இன்று பலவித தகவல்களேயும் கொண்டு மதிக்கப்படுகின்றது. இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தின் குடிசனத்தொகை 146528.

## புகைப்படம்

இன்று புகைப்படம், நிழற்படம், அசற்படம், நிறப்படம் எடுக்கும் கருவிகள் எல்லோருடைய தோள்களிலும் தொங்குகின்றன. முன்வந்த கருவிகள் முக்காலியில் பொருத்தப்பட்டுப் படம் பிடிப்பவர் றெடி! றெடி!! என்று கூறப் படமெடுக்கப்படுபவர் ஆடாமல் அசையாமல் இமைகொட்டாமல் நட்டகட்டைபோல நின்றனர். இருந்தனர். இன்று இரவுபகல் பாராமல் ஆட்டம் அசைவு ஓட்டம் பாய்ச்சல் பாராமல் படம் எடுக்கலாம். ஆறுமுக நாவலர் காலத்தில் 1853ம் ஆண்டில் அமெரிக்கர் படக் கருவியை யாழ்ப்பாணத்தில் புகுத்தினர். பாக்லிங் என்பார் 1856ல் படம் எடுத்துத் திரிந்தார். அவரைத் தொடர்ந்து S. K. லோட்டன் என்னும் யாழ்ப்பாணத்தார் நாவலருக்குப் பழக்கமானவர் படமெடுத்துத் திரிந்தார். ஆனல் நாவலர் படம் எடுக்கச் சம்மதிக்காததால் இன்று அவர் சாயலில் ஒருவரை நாம் நாவலர் என வணங்குகிறேம். வணங்குவோம்.

## சோம்பேறி ஈ

தேன்கூட்டில் தொழிலாள ஈக்கள் சுறுசுறுப்பாக உழைக்கும்போது, சில சோம்பேறி ஈக்கள் ஈயென்று வாழா கிடக்கும். இனப்பெருக்கத்துக்கு அவை இன்றியமையாதவை. இந்தவகையில் மனிதகுலத்திலும் சோம்பேறிகள் மற்றவர்களின் உழைப்பில் அசையாமலிருந்து அசைபோடுகிருர்கள் என்றுல் நாம் என்னசெய்வது? ஈ

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

**மாவட்ட........**

முறையில் நடைபெறும்போது பரீட்சைகளை அவர்களிடமே விட்டுவிடலாம். முன்னர் கொழும்பு வளாகத்தில் வித்துவான், தமிழ்த்தராதரம் முதலிய சான்றிதழ்கள் வழங்கப் பெற்றன. அவற்றுக்கான வகுப்புக்கள் ஆசிரியர்களின் வசதிக்கமைய நடைபெற்றன. பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் திறமையாகப் பாடஞ்சொன்னதும் உண்டு.

நல்ல வயலில் களை முளைகொண்டாற்போல இன்று கொச்சைத்தமிழ் நன்கு பரவிவருகின்றது. அதை நீக்குவதற்குக் களைபிடுங்குவோராய் ஆசிரியர்கள் பணியாற்றுதல்வேண்டும்.

பிழையறப் பேசவும் எழுதவும் தமிழர் பயிலுதல்வேண்டும் அதற்கென்றே ஓர் இயக்கந் தோன்றினும் அமையும்.

— தொடரும்

## செப்ரம்பர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | செவ்வாய் | — | தனிநாயக அடிகள் நினைவு தினம் |
| 2. | புதன் | — | விநாயக சதுர்த்தி விரதம் |
| 3. | வியாழன் | — | அரியாலை சித்திவிநாயகர் கொடி |
| 4. | வெள்ளி | — | மஞ்சவனப்பதி கந்தர் கொடி |
| 9. | புதன் | — | கலாயோகி ஆனந்தகுமாரசாமிதினம் |
| 10. | வியாழன் | — | ஏகாதசி விரதம் |
| 11. | வெள்ளி | — | ஆவணி ஓணம் பிரதோஷ விரதம் சுப்பிரமணிய பாரதியார் தினம் |
| 12. | சனி | — | நடேசர் அபிஷேகம் |
| 13. | ஞாயிறு | — | பூரணை செல்வச்சந்நிதி தேர் |
| 14. | திங்கள் | — | மஹாளய பட்சம் ஆரம்பம் |
| 18 | வெள்ளி | — | கார்த்திகை விரதம் |
| 24 | வியாழன் | — | ஏகாதசி விரதம் |
| 25 | வெள்ளி | — | பிரதோஷ விரதம் |
| 27 | ஞாயிறு | — | அமாவாசை விரதம் மஹாளய பட்சம் முடிவு |
| 28 | திங்கள் | — | நவராத்திரி விரதாரம்பம் வல்லிபுர ஆழ்வார் கொடி |
| 29 | செவ்வாய் | — | வண்ணை. பெருமாள் கொடி |

## பனைச்சபைக் கூட்டம்

இலங்கைப் பனைச்சபைக் கூட்டம் ஒன்று முதன் முதலாக யாழ்ப்பாணச் செயலகத்தில் கூடிய பொழுது மில்க்வைற் தொழிலதிபர் முதன் முதலாகக் கலந்து கொண்டார். அவர் தமது கன்னிப்பிரேரணையாகத் தமிழ் நாட்டுப் பனம்பொருளபிவிருத்தி நிபுணர் திரு. சம்பந்தம் அவர்களை இங்கே அழைத்தல் வேண்டும் என்று பிரேரித்தமை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பெற்றது. இவ் விடயமாகச் சம்பந்தம் அவர்கள் தொழிலதிபருடன் பன்முறை தொடர்பு கொண்டுள்ளார். அன்னார் வருகையால் எங்கள் பனம் பொருட்கள் அபிவிருத்தியடையப் பல வழிகள் பிறக்கும் என்பது உறுதி.



## தருகை நீண்டது

மில்க்வைற் தொழிலதிபருக்கு அரசாங்க வருமானமாக நூறு ரூபா கிடைத்தது. அது அவர் பனைச் சபைக் கூட்டத்தில் பங்குபற்றியமைக்காக வழங்கப்பெற்ற படியாகும். அவர் அதனை அப்படியே கைதடிச் சைவச் சிறுவர் இல்லத்திற்கு வழங்கி மகிழ்ந்தார்.

## வேப்பம் விதைகள் தேவை

மில்க்வைற் தொழிலகத்திற்குப் பெருந்தொகையான வேப்பம் விதைகள் தேவை. உடனடியாக நல்ல விலை கொடுத்து வாங்குவோம். அன்பர்கள் தொடர்புகொள்ளவும்.

## நெல்லிக்கன்றுகள்

பிரபல மருந்துக்கடைச் சுந்தரம்பிள்ளை அவர்கள் நல்ல இனத்து நெல்லிக்கன்றுகள் உண்டாக்கி, நாட்டுக்கு நன்மை செய்யத் தந்துள்ளார்கள். அவருக்கு நன்றி.

## நவராத்திரி மரம் நாட்டுவிழா

மில்க்வைற் தொழிலகம் நவராத்திரி நாட்களை மரம் நாட்டும் விழாத்தினங்களாகக் கொண்டாடும் வண்ணம் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் வாழ்த்தியுள்ளார்கள்.

## மில்க்வைற் செய்தி

பாடசாலைகள், சனசமூகநிலையங்கள் தமக்கு மில்க்வைற் செய்தி தேவையென்றால் தபாற் செலவுக்கான ஒரு வழியை வகுத்துக் கொள்ளவேண்டும் என விரும்புகிறோம்.

## பூசைக்குரிய சரஸ்வதிப் படம்

நவராத்திரி வேளையில் மாத்திரமன்றி நாளாந்த வழிபாட்டுக்குரிய பெரிய சரஸ்வதிப் படம் எங்களிடம் உண்டு, விரும்பியவர்கள் ஒன்று செய்யவும்.

(1) மில்க்வைற் நீலசோப் மேலுறைகள்
50 - அல்லது
(2) மில்க்வைற் பார்சோப் மேலுறைகள்
- 10

உடனடியாக அனுப்பவும்:

மில்க்வைற் தபாற்பெட்டி 77
யாழ்ப்பாணம்.



## மில்க்வைற் அலுவலர் திருமணம்

கரம்பன் கிழக்கு கிறிஸ்தோபர் தம்பதிகளின் மைந்தரும், மில்க்வைற் அலுவலக உத்தியோகத்தருமான செல்வன், கிறிஸ்ரி யேசுராசா அவர்களுக்கும்; உடுப்பிட்டி, சபாபதி மனோன்மணி தம்பதிகளின் புதல்வி மரிய கிறிஸ்ரீனா அவர்களுக்கும் கரம்பன் செபஸ்ரியார் தேவாலயத்தில் 24-8-81 திங்கள் நாள் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அன்று மில்க்வைற் தொழிலகம் விடுமுறை நாளாகி முதலாளி தொழிலாளி அனைவரும் திருமணத்தைச் சிறப்பித்து வாழ்த்திப் பெருவிருந்திற் கலந்து கொண்டார்கள். நல்லவன் யேசுராஜன் நங்கை கிறிஸ்ரீனா தொல்லறம் பலவும் ஆற்றத் துணையெனக் கைப்பிடித்தார், பல்லறம் பலவுமாற்றி பரனருள் பெற்று இவர்கள் இல்லறம் சிறக்க வாழ்க என்றனர் பெரியோர் எல்லாம். வாழ்க தம்பதிகள்.

★ உடலை அபிமானிப்பதே அகங்காரம் ★

## விஜயதசமி வித்தியாரம்பம்

குழந்தைகளுக்கு மங்களகரமாக வித்தியாரம்பம் செய்ய விரும்புபவர்கள் எங்களிடம் தங்களுக்குத் தேவையான ஏடுகளை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

## அம்பிகையின் தாய்மைக்குணம்

அம்பிகைக்கு வரதா என்றும் தாயிகா என்றும் திருநாமங்கள் வழங்குதல் உண்டு. வேண்டுவார் வேண்டுவனவற்றை ஈதல் அவள் வள்ளன்மை, அவள் தருபவள், அளிப்பவள். வழங்குபவள், கொடுப்பவள், வளம்படுத்துபவள், வாழ்விப்பவள். அவள் பரமோதரா, வாரிவழங்குதல் தாய்மைக்குணம்,

## நீலசோப் அபிமானம் பெரிது

மில்க்வைற் நீல சோப்புக்கு நாட்டில் அபிமானம் பெரிது எனக் கண்ட சிலர் தாமும் அதன் மேலுறையின் சாயலைப் புனைந்து உள்ளுடனைத் திணிக்கிறார்கள்; ஆதரவாளர்கள் எங்கள் V. M. K. அடையாளத்தைக் கவனித்து வாங்கவும்.

## முருகன் புகழ் மாலை

கந்தபுராணச் செய்யுட்கள் பதினன்கு கொண்ட துண்டுப் பிரசுரம் ஒன்று, 1981ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவில் அடியார்களுக்கு ஆயிரக்கணக்கில் வழங்கப் பெற்றது. முருகப்பெருமான் திருப்பெரு வடிவம், அவரை அடியவர்கள் போற்றும் முறை, ஆட்பட்டவர் வள்ளியம்மையார் பாவனையில் அவரை ஆன்மநாயகனைக் கண்டமை, முருகதத்துவம், வாழ்த்து என்பன அமைய மில்க்வைற் உபகரித்துள்ளார்.

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி

இத்திருக்கோயில் திருவிழா 31-8-81 திங்கட்கிழமை ஆரம்பமாகி அடுத்து வேட்டைத்திருவிழா, சப்பரத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா, வைரவ பொங்கல் முதலியன பன்னிரண்டு நாட்கள் நடைபெறும்.

## வெயர்வை சிந்த உழைத்தல்

ஆண்டுக்கொருநாள்ஆயுத பூசைசெய்தால் போதாது, நாள்தோறும் வெயர்வை அரும்ப உழைத்தல்வேண்டும், வெறும் இயந்திர சாதனங்களை நம்பி எங்கள் பாரம்பரிய கலைத்திறனைக் கைசோர விடலாகாது, நாள்தோறும் நமதுழைப்புக்கு உறுதுணையான கருவிகளைக் கண்ணில் ஒற்றி வழிபட்டுத் தொழில்செய்து புகழ்பெறுதல்வேண்டும், தொழில்வளம்பெருக்கும் பண்பினைப்பற்றிப் பாரதியார் பாடும்போது தொழில் திறமை கைவந்தவர்கள் நாமகளோடு தொடர்புள்ள நான்முகனை பிரமதேவனின் அம்சமானவர்கள் என்பர்,

''அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே
பெரும்புகழ் நுமக்கே யிசைக்கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே'',

## சீலம்

சீலம் என்றால் நல்லியல்பு, நற்குணம், நல்லொழுக்கம், அறப்பண்பு, நேர்மை என்பனவாகும். சீலம் சிறந்த ஆபரணம். சீலத்தை மறக்கலாகாது என்று மாணிக்க வாசக சுவாமிகள் தமது திருக்கோவையாரிற் பாடியருளியுள்ளார்.

## பாரதியாருக்கு நூறாண்டு

பாரதி என நூற்றுக்கணக்கானோர் பட்டமும் பெயரும் பெற்றிருந்தாலும், பாரதி என்றதும் சுப்பிரமணிய பாரதியார் அவர்களையே எவரும் கருதுவர், பாரதியார் பாடிக்குவித்தவற்றைப் பண்டித உலகம் ஒருசமயம் பாராட்டாமல் இருந்தது. ஆனால் ஈழத்து முதற்பண்டிதரான மயில்வாகனனார் என்னும் விபுலானந்த அடிகள் முதன்முதலாகப் பாரதியார் பாடல்களுக்குப் பெருமதிப் புக்கொடுத்தார். பாரதியார் தமிழையும் தமிழ்நாட்டையும் தம்மிரு கண்கள் எனப் பாடினார்.


# நீம் சுகாதார தூபம்

மழைகாலத்தோடு நுளம்பும் ஈலையானும் அதிகமாகப் பெருகி உபத்திரவந் தருகின்றன. இவற்றைப் போக்குவதோடு வீடுகளுக்குப் புனிதத்தையும், கணகணப்பையும், லட்சுமி கடாட்சத்தையும் உண்டாக்கும்.




'மில்க்வைற்' நீம் சுகாதார தூபத்தை தணலில் இட்டுப் புகைத்துப் பாருங்கள். எவரும் வாங்கக் கூடியதாக 25 சதம் பெறுமதியான பைகளில் உண்டு.


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-9-81.